## விசேட சிறப்புக் குறிப்பு

## இலங்கை மத்திய வங்கியினால் நடைமுறைப்படுத்தப்பட்ட அல்லது அதனுடன் தொடர்புடைய முக்கிய பொருளாதாரக் கொள்கை வழிமுறைகள்[1]

| | |
|---|---|
| **நாணயக் கொள்கை** | |
| 2025 மே 22 | ஓரிரவு கொள்கை வீதம் 8.00 சதவீதத்திலிருந்து 7.75 சதவீதத்திற்கு 25 அடிப்படைப் புள்ளிகளினால் குறைக்கப்பட்டது. அத்துடன், ஓரிரவு கொள்கை வீதத்தைச் சுற்றி ±50 அடிப்படைப் புள்ளிகளைக் கொண்ட எல்லையொன்றில் பேணும்வகையில், துணைநில் வைப்பு வசதி வீதம் மற்றும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதம் போன்றன முறையே 7.25 சதவீதத்திற்கும் 8.25 சதவீதத்திற்கும் நிர்ணயிக்கப்பட்டன. |
| **கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள்** | |
| 2025 சனவரி 27 | டிஜிட்டல் கொடுக்கல்வாங்கல்களின் தழுவலை ஊக்குவிக்கும் பொருட்டு, 2025 பெப்புருவரி 01 தொடக்கம் நடைமுறைக்குவரும் வகையில், GovPay மூலம் மேற்கொள்ளப்படும் கொடுப்பனவுகளுக்கு கொடுக்கல்வாங்கல் ஒன்றுக்கான உயர்ந்தபட்ச கட்டணமாக ரூ.15இனை இலங்கை மத்திய வங்கி கட்டாயமாக்கியது. தகவல் தொழில்நுட்ப முறைமைகளைக் கொண்டிராத அரசாங்க நிறுவனங்கள் உடனடி டிஜிட்டல் கொடுப்பனவுகளை ஏற்றுக்கொள்வதற்கு GovPay இயலச்செய்துள்ளது. |
| 2025 பெப்புருவரி 07 | 2025 பெப்புருவரி 15 தொடக்கம் நடைமுறைக்குவரும் வகையில், பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளியின் உறுப்பினர்களின் இணையவழி வங்கித்தொழில், செல்லிடத் தொலைபேசி வங்கித்தொழில் மற்றும் தன்னியக்க கூற்றுப் பொறி போன்றவற்றினூடாக மேற்கொள்ளப்படும் அதேநேர நிதிய மாற்றல்களின் கொடுக்கல்வாங்கல் ஒன்றுக்கான உயர்ந்தபட்ச் கட்டணமாக ரூ.25இனை இலங்கை மத்திய வங்கியானது கட்டாயமாக்கியது. அதேநேர கொடுப்பனவுகளை செய்முறைப்படுத்தி வாடிக்கையாளரின் கணக்குகளை இற்றைப்படுத்துவதற்கான தகவல் தொழில்நுட்ப முறைமைகளைக் கொண்டுள்ள உள்நாட்டு இறைவரித் திணைக்களம் மற்றும் இலங்கைச் சுங்கம் போன்ற நிறுவனங்களுக்கு, லங்காபே இணையவழி கொடுப்பனவுத் தளத்தினூடாக மேற்கொள்ளப்படும் கொடுக்கல்வாங்கல் ஒன்றுக்கு விதிக்கப்படும் உயர்ந்தபட்ச கட்டணம் 2025 பெப்புருவரி 15 தொடக்கம் நடைமுறைக்குவரும் வகையில் கொடுக்கல்வாங்கல் ஒன்றுக்கு ரூ.25 இனை விஞ்சலாகாது எனவும் கட்டாயமாக்கப்பட்டது. |
| 2025 பெப்புருவரி 20 | லங்காகியூஆர் வணிகங்களில் AliPay+ இயலச்செய்துள்ள செல்லிடத்தொலைபேசி செயலிகளினூடாக சுற்றுலாப் பயணிகளினால் மேற்கொள்ளப்படும் லங்காகியூஆர் கொடுக்கல்வாங்கல்களை ஏற்றுக்கொள்வதற்காக AliPay சிங்கப்பூர் இ-கொமர்ஸ் பிரைவெட் லிமிடெட்டுடன் இணைவதற்கு லங்காபே (பிரைவெட்) லிமிடெட்டிற்கு ஒப்புதல் வழங்கப்பட்டது. |
| 2025 யூன் 11 | 2025 யூன் 25 தொடக்கம் நடைமுறைக்குவரும் வகையில், இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமையில் முதனிலைப் பங்கேற்பாளர்களின் வாடிக்கையாளர்களினால் தொடங்கப்பட்ட நிதிய மாற்றல்களின் உயர்ந்தபட்ச பெறுமதியானது கொடுக்கல்வாங்கல் ஒன்றுக்கு ரூ.5 மில்லியனிலிருந்து ரூ.10 மில்லியனிற்கு அதிகரிக்கப்பட்டது. மேலும், இலங்கை மத்திய வங்கியில் கணக்கு வைத்திருக்கும் அரசாங்க நிறுவனங்களுக்கு, இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமையினூடாக கொடுக்கல்வாங்கல் ஒன்றுக்கு உயர்ந்தபட்சமாக ரூ.50 மில்லியன் பெறுமதியிலான கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்ள அக் கணக்குகளைப் பயன்படுத்துவதற்கு ஒப்புதல் வழங்கப்பட்டது. |
| 2025 திசெம்பர் 23 | பணம் அல்லது பெறுமதி மாற்றல் பணி வழங்குநர் ஒழுங்குவிதிகள், 2025ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க பணம் அல்லது பெறுமதி மாற்றல் பணி வழங்குநர் ஒழுங்குவிதிகளாகத் திருத்தம் செய்யப்பட்டு, 2025 திசெம்பர் 31 தொடக்கம் நடைமுறைக்குவரும் வகையில் வழங்கப்பட்டது. பணம் அல்லது பெறுமதி மாற்றல் பணி வழங்குநர் ஒழுங்குவிதிகளின் ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை கட்டமைப்பின் கீழ் பதிவுசெய்வதற்கு 2025ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க பணம் அல்லது பெறுமதி மாற்றல் பணி வழங்குநர் ஒழுங்குவிதிகள் வெளிநாட்டுப் பண மாற்றல் பணி வழங்குநர்களை தேவைப்படுத்துகின்றது. |

[1] 2025 சனவரி 01 தொடக்கம் 2026 மாச்சு 25 வரை நடைமுறைப்படுத்தப்பட்ட முக்கிய பொருளாதாரக் கொள்கை வழிமுறைகளை உள்ளடக்குகின்றது.

இலங்கை மத்திய வங்கியினால் நடைமுறைப்படுத்தப்பட்ட அல்லது அதற்குத் தொடர்புடைய கொள்கை வழிமுறைகளின் விரிவான பதிப்பும் 2025 சனவரி 01 தொடக்கம் 2026 மாச்சு 27 வரை நடைமுறைப்படுத்தப்பட்ட முக்கிய இறைக் கொள்கை வழிமுறைகள் இணையத்தள இணைப்பில் கிடைக்கப்பெறுகின்றன.

**பாதை** - முதன்மைப் பட்டி ➔ வெளியீடுகள் ➔ பொருளாதார மற்றும் நிதியியல் அறிக்கைகள் ➔ ஆண்டிற்கான பொருளாதார மீளாய்வு ➔ ஆண்டிற்கான பொருளாதார மீளாய்வு 2025 ➔ இலங்கை மத்திய வங்கியினால் நடைமுறைப்படுத்தப்பட்ட அல்லது அதனுடன் தொடர்புடைய முக்கிய பொருளாதாரக் கொள்கை வழிமுறைகள்

**இணைப்பு** - https://www.cbsl.gov.lk/ta/வெளியீடுகள்/பொருளாதார-மற்றும்-நிதியியல்-அறிக்கை/ஆண்டிற்கான-பொருளாதார-மீளாய்வு/ஆண்டிற்கான-பொருளாதார-மீளாய்வு-2025/முக்கிய-பொருளாதார-கொள்கை-வழிமுறைகள்

3

| பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதி நிதியளித்தலை ஒழித்தல் | |
|---|---|
| 2025 பெப்புருவரி 27 | மேலதிக விசாரணைகளுக்காக வெளிநாட்டு நிதியியல் உளவறிதல் பிரிவுகளிலிருந்து தேவையான தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு மேற்கொள்ளப்பட்ட கோரிக்கைகள் தொடர்பில் 2025ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க வழிகாட்டல்கள் வழங்கப்பட்டன. |
| 2025 மார்ச் 20 | 2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நிதிசார் கொடுக்கல்வாங்கல்கள் அறிக்கையிடல் சட்டத்தின் 15(1)(அ) மற்றும் 15(2) ஆம் பிரிவுகளின் கீழ் தகவல்களை கோருவது தொடர்பில் 2025ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க வழிகாட்டல்கள் வழங்கப்பட்டன. |
| | 2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நிதிசார் கொடுக்கல்வாங்கல்கள் அறிக்கையிடல் சட்டத்தின் கீழ் மேலதிக விசாரணைகளுக்காக தேவையான உதவியினை கோருவது தொடர்பில் 2025ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க வழிகாட்டல்கள் வழங்கப்பட்டன. |
| 2025 ஏப்பிறல் 04 | 2016ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க நிதியியல் நிறுவனங்கள் (வாடிக்கையாளர் உரிய விழிப்புக்கவனம்) விதிகளின் கீழ் அரசுசாரா நிறுவனங்கள், இலாப நோக்கமற்ற நிறுவனங்கள் அல்லது அறக்கட்டளைகள் போன்றவற்றுடன் தொடர்புடைய மேம்படுத்தப்பட்ட உரிய விழிப்புக் கவனத்தை நடாத்துவது குறித்து சுற்றறிக்கை 01/2025 வழங்கப்பட்டது. |
| 2025 செத்தெம்பர் 03 | குதிரைப் பந்தயக் கட்டளைச் சட்டம், சூதாட்டக் கட்டளைச் சட்டம் மற்றும் 2010ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க சீட்டாட்டத் தொழில் (ஒழுங்குபடுத்தல்) சட்டம் போன்றவற்றை இரத்துச்செய்யும் வகையில் 2025ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க பணச்சூதாட்டத்தை ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைச் சட்டம் இயற்றப்பட்டது. |
| 2025 செத்தெம்பர் 10 | 2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நிதிசார் கொடுக்கல்வாங்கல்கள் அறிக்கையிடல் சட்டத்தின் 15(1)(அ) ஆம் பிரிவின் கீழ் தகவல்களை அறிக்கையிடல் தொடர்பான 2025ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க வழிகாட்டல்கள் வழங்கப்பட்டன. |
| 2025 செத்தெம்பர் 11 | 2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நிதிசார் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடல் சட்டத்தின் 15(1)(அ) ஆம் பிரிவின் கீழ் தகவல்களை அறிக்கையிடல் தொடர்பான 2025ஆம் ஆண்டின் 05ஆம் இலக்க வழிகாட்டல்கள் வழங்கப்பட்டன. |
| | 2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நிதிசார் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடல் சட்டத்தின் 15(1)(அ) ஆம் பிரிவின் கீழ் தகவல்களை வழங்குவதற்கான கோரிக்கைகள் தொடர்பில் 2025ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க வழிகாட்டல்கள் வழங்கப்பட்டன. |
| | 2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நிதிசார் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடல் சட்டத்தின் 15(1)(அ) ஆம் பிரிவின் கீழ் தகவல்களை வழங்குவதற்கான கோரிக்கைகள் தொடர்பில் 2025ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க வழிகாட்டல்கள் வழங்கப்பட்டன. |
| 2025 திசெம்பர் 01 | பணச்சூதாட்டத்தை ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைச் சட்டம் இயற்றப்பட்டதுடன் சூதாட்டத் துறைக்கு உரிமத்தை வழங்குவதற்கும் மேற்பார்வை செய்வதற்குமான பரந்தளவிலான அதிகாரங்களுடன், சூதாட்டத்தை ஒழுங்குபடுத்தும் அதிகாரசபையொன்று தாபிக்கப்பட்டது. |
| 2026 சனவரி 20 | மெய்நிகர் சொத்துக்களை ஒழுங்குமுறைப்படுத்தும் கொள்கைத் தீர்மானத்திற்கு ஆதரவளிக்கும் வகையில், மெய்நிகர் சொத்துப் பணி வழங்குநர்களுக்கான முன்மதியுடைய ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பொன்றைத் தாபிப்பதற்கு நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இம்முன்னெடுப்பினை மேலும் வலுப்படுத்துவதற்கு, பணம் தூயதாக்கலுக்கெதிராக/பயங்கரவாதி நிதியளித்தலை ஒழித்தல் தேசிய ஒருங்கிணைப்பு குழுவின் கொள்கை வழிகாட்டலின் கீழ் துணைக் குழுவொன்று தாபிக்கப்பட்டுள்ளது. 2026 சனவரியில் இத் துணைக்குழுவின் அங்குரார்ப்பணக் கூட்டம் இடம்பெற்றது. |
| 2026 பெப்புருவரி 19 | 2026ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க இலங்கை உண்மைச் சொத்து தொழில்சார் நிபுணர்களின் நிறுவனச் சட்டமியற்றுதல். |
| 2026 மாச்சு 11 | 2026.03.06ஆம் திகதியிடப்பட்ட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பயங்கரவாதி நிதியளித்தலை ஒடுக்குதல் மீதான சமவாய (திருத்தம்) சட்ட மூலம் (இல. 18/2026) 2026.03.11 அன்று வழங்கப்பட்டது. |
| 2026 மாச்சு 13 | நிதியியல் நிறுவனங்கள் மற்றும் குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரங்கள் மற்றும் தொழில்சார் நடவடிக்கைகள் போன்றவற்றிற்கான தேசிய பணம் தூயதாக்கல், பயங்கரவாதி நிதியளித்தல் மற்றும் ஆயுதப் பெருக்கத்திற்கு நிதியளித்தல் இடர்நேர்வு மதிப்பீட்டுடன் இசைந்துசெல்லும் வகையில் நிறுவனசார் இடர்நேர்வு மதிப்பீடுகளின் மீளாய்வு மற்றும் இற்றைப்படுத்தல் மீது 01/2026ஆம் இலக்க சுற்றறிக்கை வழங்கப்பட்டது. |

| | |
|---|---|
| 2026 மாச்சு 17 | 2026.03.13ஆம் திகதியிடப்பட்ட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பணம் தூயதாக்கல் தடுப்பு (திருத்தம்) சட்டமூலம் (இல. 20/2026) 2026.03.17 அன்று வழங்கப்பட்டது.<br>2026.03.13ஆம் திகதியிடப்பட்ட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட நிதிசார் கொடுக்கல்வாங்கல்கள் அறிக்கையிடல் (திருத்தம்) சட்டமூலம் (இல. 21/2026) 2026.03.17 அன்று வழங்கப்பட்டது. |

**பொதுப் படுகடன் முகாமைத்துவம்**

| | |
|---|---|
| 2025 திசெம்பர் 31 | 2024ஆம் ஆண்டின் 33ஆம் இலக்க பொதுப் படுகடன் முகாமைத்துவச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட பொதுப் படுகடன் முகாமைத்துவ அலுவலகத்திற்கு இலங்கை மத்திய வங்கியிடமிருந்து பொதுப் படுகடன் முகாமைத்துவப் பணிகள் மாற்றப்பட்டு, பொதுப் படுகடன் முகாமைத்துவ அலுவலகம் 2025 திசெம்பரில் முழுமையாகத் தொழிற்படத் தொடங்கியதுடன் இலங்கை மத்திய வங்கியின் பொதுப் படுகடன் திணைக்களத்தினால் முன்னர் கொண்டு நடாத்தப்பட்ட அத்தகைய தொழிற்பாடுகளுக்கு முழுப் பொறுப்பையும் ஏற்றுக்கொண்டது. பொதுப் படுகடன் முகாமைத்துவச் சட்டம் மற்றும் 2023ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க மத்திய வங்கிச் சட்டத்தின் தொடர்புடைய ஏற்பாடுகளின் நியதிகளின் பிரகாரம், 2026 சனவரி 01 தொடக்கம் நடைமுறைக்குவரும் வகையில் இலங்கை மத்திய வங்கியின் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களத்தின் கீழ் அரச பிணையங்களுக்கான பத்திரங்களற்ற பிணையங்கள் தீர்ப்பனவு முறைமையையும் மத்திய வைப்பக முறைமையையும் இலங்கை மத்திய வங்கி தொடர்ந்தும் தொழிற்படுத்தும். |

**நிதியியல் துறை**

உரிமம்பெற்ற வங்கிகள்

| | |
|---|---|
| 2025 மே 07 | டிஜிட்டல் உட்கட்டமைப்பு மீதான அதிகரித்த தங்கியிருத்தலையும் இலங்கை மத்திய வங்கிக்கு இணையப்பாதுகாப்புச் சம்பவங்களை உடனடியாகவும் வெளிப்படைத்தன்மையுடனும் கூடிய அறிக்கையிடலுக்கான தேவையொன்றினை அவசியப்படுத்துகின்ற இணைந்த இடர்நேர்வுகளையும் கருத்திற்கொண்டு, உரிமம்பெற்ற வங்கிகளின் தொழிற்பாடுசார் தாக்குப்பிடிக்கும்தன்மையை அதிகரிப்பதற்கேற்ற வகையில் "உரிமம்பெற்ற வங்கிகளின் தகவல் தொழில்நுட்ப மற்றும் இணையப்பாதுகாப்புச் சம்பவங்களை அறிக்கையிடல்" மீதான சுற்றறிக்கையொன்று "உரிமம்பெற்ற வங்கிகளுக்கான தொழில்நுட்ப இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் தாக்குப்பிடிக்கும்தன்மை தொடர்பான ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பு" பற்றிய 2021ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட பணிப்புரைக்கு மேலதிகமாக வழங்கப்பட்டது. |
| 2025 செத்தெம்பர் 17 | உரிமம்பெற்ற வங்கிகளின் தாக்குப்பிடிக்கும்தன்மையை உறுதிப்படுத்தும் பொருட்டு, 2023ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க வங்கித்தொழில் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் மீட்புத் திட்டங்களைத் தயாரிக்குமாறு உரிமம்பெற்ற வங்கிகளுக்கு சட்டப் பணிப்புரைகள் வழங்கப்பட்டன. மேலும், இது தொடர்பில் வெளியிடப்பட்ட முன்னைய வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் இரத்துச்செய்யப்பட்டன. |
| 2025 திசெம்பர் 05 | அண்மைய புயல் மற்றும் வெள்ள அனர்த்தங்களின் பாதகமான தாக்கத்தையும் உரிமம்பெற்ற வங்கிகளின் பாதிக்கப்பட்ட கடன்பாட்டாளர்களுக்கு செயல்திறன்மிக்க நிவாரணத்தை வழங்குவதற்கான தேவையையும் கருத்திற்கொண்டு, வருமானம்/ வியாபாரம் நேரடியாக பாதிக்கப்பட்டிருந்த தனிநபர்களுக்கும் வியாபாரங்களுக்கும் நிவாரண வழிமுறைகளை வழங்குமாறு சகல உரிமம்பெற்ற வங்கிகளிடம் கோரும் "அண்மைய புயல் மற்றும் வெள்ள அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட தனிநபர்களுக்கும் வியாபாரங்களுக்குமான நிவாரண வழிமுறைகள்" மீதான சுற்றறிக்கையொன்று வழங்கப்பட்டது. |
| 2026 மாச்சு 25 | உரிமம்பெற்ற வங்கிகள் வியாபாரத் தொழிற்பாடுகளின் வெளியிலிருந்து சேவைபெற்றுக்கொள்ளுதலுக்கான ஆற்றல்வாய்ந்த மற்றும் முன்மதிமிக்க கட்டமைப்பினை பின்பற்றுகின்றன என்பதனை உறுதிசெய்யும் பொருட்டு டிஜிட்டல் மயமாக்கப்பட்ட செயன்முறைகள் மற்றும் தொழிற்பாடுகளில் புதிய வியாபார நடவடிக்கைகள் மற்றும் முன்னேற்றங்கள் மூலம் இயக்கப்படும் வங்கித்தொழில் துறையில் பரிணமிக்கின்ற போக்குகளைப் பரிசீலனையில் கொண்டு உரிமம்பெற்ற வங்கிகளின் வியாபாரத் தொழிற்பாடுகளின் வெளியிலிருந்து சேவைபெற்றுக்கொள்ளுதல் மீதான வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் வழங்கப்பட்டன. |

3

நிதிக் கம்பனிகள், சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனி, உரிமம்பெற்ற நுண்பாக நிதிக் கம்பனிகள் மற்றும் முதனிலை வணிகர் கம்பனிகள்

| | |
|---|---|
| 2025 யூன் 23 | நிதிக் கம்பனிகளினால் வழங்கப்படுகின்ற அல்லது செலுத்தப்படுகின்ற வைப்பு மற்றும் படுகடன் சாதனங்கள் மீதான உயர்ந்தபட்ச வட்டி வீதங்களை நிர்ணயிப்பதற்கான முறையொன்றினை வழங்குவதன் மூலம் வைப்புக்களைக் கோருதல் மற்றும் படுகடன் சாதனங்களை வழங்குதல் என்பவற்றில் நீடித்துநிலைத்திருக்கின்ற வியாபார நடைமுறைகளை ஊக்குவிக்கும் பொருட்டு வைப்புக்கள் மற்றும் படுகடன் சாதனங்கள் மீதான உயர்ந்தபட்ச வட்டி வீதங்கள் குறித்துப் பணிப்புரையொன்று வழங்கப்பட்டது. |
| 2025 ஓகத்து 20 | உரிமம்பெற்ற நுண்பாக நிதிக் கம்பனிகளின் நடவடிக்கைகளின் தன்மை, அளவு மற்றும் சிக்கல்தன்மையுடன் ஒத்திசைந்து செல்லும் விதத்தில் கொடுகடன் இடர்நேர்வினை அடையாளங்காண்பதற்கு, அளவிடுவதற்கு, கண்காணிப்பதற்கு மற்றும் கட்டுப்படுத்துவதற்குக் கொடுகடன் இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பொன்றினைத் தாபிக்கும் பொருட்டு உரிமம்பெற்ற நுண்பாக நிதிக் கம்பனிகளிற்கான கொடுகடன் இடர்நேர்வு முகாமைத்துவம் குறித்துப் பணிப்புரையொன்று வழங்கப்பட்டது. |
| 2025 செத்தெம்பர் 16 | சாத்தியமான இடர்நேர்வுகள் மற்றும் எதிர்பாராத இழப்புக்கள் என்பவற்றினை உள்ளீர்ப்பதற்கு நிதியியல் தாங்கியிருப்பொன்றினை வழங்குவதன் மூலம் துறையின் தாக்குப்பிடிக்குந்தன்மையினை வலுப்படுத்துவதற்காக முதனிலை வணிகர் கம்பனிகளின் குறைந்தபட்ச மைய மூலதனத் தேவைப்பாடு குறித்துப் பணிப்புரையொன்று வழங்கப்பட்டது. |
| 2025 நவெம்பர் 07 | திரவத்தன்மை இடர்நேர்வினை அடையாளம் காணுதல், அளவிடுதல், கண்காணித்தல் மற்றும் அறிக்கையிடல், கட்டுப்படுத்தல் மற்றும் தணித்தல் என்பவற்றினை மேற்கொள்ளும் பொருட்டு திரவத்தன்மை இடர்நேர்வு முகாமைத்துவ உபாயம், கொள்கை மற்றும் நடைமுறைகள், ஆளுகைக் கட்டமைப்பு மற்றும் வினைத்திறன்மிக்க திரவத்தன்மை இடர்நேர்வு முகாமைத்துவச் செயன்முறையொன்றினை உருவாக்குவதனூடாக நிதிக் கம்பனிகளில் வலுவான திரவத்தன்மை இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பொன்றினைத் தாபிக்கும் பொருட்டு திரவத்தன்மை இடர்நேர்வு முகாமைத்துவம் குறித்துப் பணிப்புரையொன்று வழங்கப்பட்டது<br><br>2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித்தொழில் சட்டத்திற்கு முன்மொழியப்பட்ட திருத்தங்கள் பொதுமக்களிடமிருந்தும் ஆர்வலர்களிடமிருந்துமான கருத்துக்கள், ஆலோசனைகள் மற்றும் குறிப்புரைகள் என்பவற்றினைக் கோரும் பொருட்டு பொதுமக்களின் கலந்தாய்விற்காக வழங்கப்பட்டன. |
| 2026 சனவரி 09 | அண்மைய புயல் மற்றும் வெள்ள அனர்த்தங்களின் பாதகமான தாக்கத்தையும் நிதிக் கம்பனிகளின் பாதிக்கப்பட்ட கடன்பாட்டாளர்களுக்கு செயல்திறன்மிக்க நிவாரணத்தை வழங்குவதற்கான தேவையையும் கருத்திற்கொண்டு, வருமானம் அல்லது வியாபாரம் நேரடியாக பாதிக்கப்பட்டிருந்த தனிநபர்களுக்கும் வியாபாரங்களுக்கும் நிவாரண வழிமுறைகளை வழங்குமாறு சகல நிதிக் கம்பனிகளிடம் கோரும் “அண்மைய புயல் மற்றும் வெள்ள அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட தனிநபர்களுக்கும் வியாபாரங்களுக்குமான நிவாரண வழிமுறைகள்” மீதான சுற்றறிக்கையொன்று வழங்கப்பட்டது. |
| 2026 சனவரி 12 | வைப்புக்கள் மற்றும் படுகடன் சாதனங்கள் என்பவற்றிற்கு நிதிக் கம்பனிகளினால் வழங்கப்படுகின்ற உயர்ந்தபட்ச வட்டி வீதங்களின் திருத்தம் குறித்துப் பணிப்புரையொன்று வழங்கப்பட்டது. |